இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

முகாமைத்துவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

மட்டம்-03

இறுதிப் பரீட்சை-2011

நிதியும் கிரயக்கணக்கியலும் (MCU 1206)

நேரம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

| திகதி: 27.02.2011 | நேரம்: 9.30 am – 12.30 pm |
|---|---|

முக்கியாமான அறிவுறுத்தல்கள்

- முதலாம் வினா (1) உட்பட நான்கு (4) வினாக்களுக்கு விடையளிக்க. எல்லா செயன் முறைகளையும் காட்டுக.
- நிகழ்ச்சிப்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்படும்.

Q1.

நிறோஜி லிமிட்டட் எனும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியானது இலங்கையில் மருந்துப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றது. 31 மார்ச்சு 2010ல் முடிவுற்ற வருடத்திற்கான நிறோஜி லிமிட்டடின் ஏடுகளிலிருந்து பினவரும் பரீட்சை மீதியானது பேர்த்தெடுக்கப்பட்டது.

| மீதிகள் | வரவு(000) | செலவு(000) |
|---|---|---|
| வழங்கிய பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூபா.50/= பெறுமதியான சாதாரண பங்குகள்) | | 5,000 |
| ஒவ்வொன்றும் ரூபா.50/= விலையுள்ள 15% மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் | | 2,000 |
| 01.04.2009 இல் நிறுத்தி வைத்த இலாபம் | | 2,100 |
| காணி, கட்டிடங்கள் கிரயத்தில் (கட்டிடம் ரூபா.5,000,000) | 9,000 | |
| தளபாடமும், பொருத்துக்களும் கிரயத்தில் | 1,000 | |
| மோட்டார் வாகனங்கள் கிரய விலையில் | 5,000 | |
| 01/04/2009 இல் கட்டிடங்களுக்கான தேய்வு ஏற்பாடு | | 500 |
| 01/04/2009 இல் மோட்டார் வாகனங்களுக்கான தேய்வு ஏற்பாடு | | 2,500 |
| 01/04/2009 இல் தளபாடம் பொருத்துக்களுக்கான தேய்வு ஏற்பாடு | | 500 |
| பட்டியலிட்ட கம்பனி பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு-கிரய விலையில | 2,720 | |

| | | |
|---|---|---|
| 31/03/2010 இல் இருப்புக்கள் | 1,000 | |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | 600 | |
| நிர்வாகச் செலவுகள் | 400 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 300 | |
| ஏனைய செலவுகள் | 100 | |
| வியாபாரக் கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் | 2,000 | 1,000 |
| 01/04/2009 இல் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | | 35 |
| வங்கி மீதிகள் | 3,000 | |
| காசு மீதி | 710 | |
| விற்பனைக் கிரயம்/விற்பனைகள் | 7,000 | 12,000 |
| ஏனைய வருமானம் | | 400 |
| தொங்கல் கணக்கு | | 6,875 |
| செலுத்திய வரி | 80 | |
| | **32,910** | **32,910** |

பின் வரும் மேலதிகத் தகவல்களும் உமக்கு வழங்கப்படுகின்றன.

1. நடைமுறையில்லாச் சொத்துக்களின் தேய்மானம் தொடர்பான கம்பனிக் கொள்கையானது பின்வருமாறு காணப்பட்டது.

   கட்டிடங்கள் நேர் கோட்டு முறையில் 5%

   தளபாடங்களும் பொருத்திகளும், குறைந்து செல்லும் மீதி முறையில் 5%

   மோட்டார் வாகனங்கள் கிரயத்தில் 25%

   (மோட்டார் வாகனங்களில் 30% நிர்வாகத்திற்கும், 70% விற்பனை விநியோகத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது).

2. ஐந்தொகைத் தினத்தில், முதலீடுகளின் சந்தைப் பெறுமதி ரூபா. 2,700,000/= ஆக இருந்தது.

3. 2010 மார்ச்சு மாதத்தில் செலுத்தப்படவேண்டிய மின், நீர் மற்றும் தொலைபேசி நிலுவைகள் முறையே ரூபா.5,000/=, ரூபா.2,000/= மற்றும் ரூபா.7,000/= ஆக இருந்தது.

4. அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு, மீதிக் கடன்பட்டோரில் 5% ஆக உயர்த்தப்படவேண்டும்

5. வரிகளில் ¼ சென்ற நிதியாண்டுக்குரியவை. நடைமுறை ஆண்டுக்காக இறுதிக் காலாண்டுக்கெனச் செலுத்தப்படவேண்டிய வரி ரூபா.25,000/=

6. திருப்பி அனுப்பப்பட்ட ரூபா.80,000/= க்கான காசோலை மற்றும் வங்கிக் கட்டணங்கள் ரூபா.6,000/= ஆகியன தவறுதலாக வங்கிக் கணக்கிலிருந்து கழிக்கப்படவில்லை. திருப்பி அனுப்பப்பட்ட காசோலைப் பெறுமதி அறமுடியாக் கடனாக பதிவழிக்கப்படவேண்டும்.

7. மார்ச்சு 2010 இல் கம்பனி ஒவ்வொன்றும் ரூபா.50/= பெறுமதியான 100,000 சாதாரண பங்குகளை விநியோகம் செய்தது. இப்பங்குகள், பங்கொன்று ரூபா.75/= படி விநியோகம் செய்யப்பட்டன. 25000 பங்குகளுக்கான இறுதி அழைப்பான ரூபா.25/= தவிர மீதிப் பணம் முழுவதும் பெறப்பட்டது. இந் நடவடிக்கைகளில் பெறப்பட்ட பணம், ரூபா.6,875,000/= வங்கிக் கணக்கில் வரவிலும், தொங்கல் கணக்கில் செலவிலும் பதியப்பட்டன. இதற்கான பொருத்தமான பதிவுகளை ஏடுகளில் மேற்கொள்க.

8. நிதியாண்டின் இறுதியில் பணிப்பாளர் சபையானது, பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டன.

- நிதியாண்டின் ஆரம்பத்தில் (01/04/2009) இல் காணப்படும் சாதாரண பங்கு முதலுக்கு 15% பங்கிலாபம் வழங்குதல்
- முன்னுரிமைப் பங்கு முதலுக்கு தீர்மானிக்கப்பட்ட வீதப்படி, பங்கிலாபம் வழங்குதல்
- பொது ஒதுக்கத்திற்கு ரூபா.1,000,000/= ஒதுக்குதல்.

மேற் கூறப்பட்ட தகவல்களிலுருந்து, நிறோஜி லிமிட்டட் கம்பனியினி பணிப்பாளர் சபைக்கு சமர்பிக்கும் பொருட்டு பின் வருவனற்றைத் தயாரிக்க.

- 31/03/2010 இல் முடிவடைந்த வருடத்துக்கான, நிறோஜி லிமிட்டட் கம்பனியினின் இலாப நட்டக் கணக்கு (Profit and loss account)
- 31/03/2010 இல் உள்ளபடி நிறோஜி லிமிட்டட் கம்பனியினின் ஐந்தொகை (Balance Sheet).

(40 புள்ளிகள்)

**Q2)**

சாப்பு, சிறி மற்றும் சான் என்போர் 3:3:4 எனும் அடிப்படையில் இலாப நட்டங்களைப் பகிரக் கூடிய வகையில் பங்குடமை ஒன்றை நடத்தி வந்தனர் 30.09.2010 இல அவர்களுடைய ஐந்தொகை பின்வருமாறு அமைந்திருந்தது.

| <u>முதலீட்டுக் கணக்கு</u> | ரூபா. |
|---|---|
| சாப்பு | 500,000 |
| சிறி | 350,000 |
| சான் | 300,000 |
| | 1150,000 |
| பொது ஒதுக்கம் | 90,000 |
| <u>நடைமுறைக்கணக்கு</u> | |
| சாப்பு | 150,000 |

| <u>நடைமுறையில்லாச் சொத்து</u> | ரூபா. |
|---|---|
| காணி கட்டிடம் | 870,000 |
| அலுவலக உபகரணங்கள | 187,000 |
| மோட்டார் வாகனங்கள | 267,000 |
| | 1,324,000 |
| முதலீடுகள் | 150,000 |
| <u>நடைமுறைச் சொத்து</u> | |
| இருப்புக்கள் கிரயப்பெறுமதியில் | 85,000 |

| | | | |
|---|---|---|---|
| சிறி | (50,000) | கடன் பட்டோர் | 76,000 |
| சான் | 100,000 | காசு | 80,000 |
| | 200,000 | | |
| 14% வங்கிக் கடன் | 200,000 | | |
| **நடைமுறைக் கடன்கள்** | | | |
| கடன் கொடுத்தோர் | 75,000 | | |
| | 1,715,000 | | 1,715,000 |

பங்காளர்கள் பங்குடமையைக் கலைக்கத் தீர்மானித்தனர். இச் செயன்முறை 30.10.2010 இல் முடிவுறும். இக் காலப் பகுதியில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

1. சொத்துக்கள் பின்வருமாறு தேறின.
   காணி கட்டிடங்கள் ரூபா.950,000/=

   அலுவலக உபகரணங்கள் ரூபா.75,000/= (பகுதியளவு தேறின)

   மோட்டார் வாகனங்கள் ரூபா. 200,000/=
2. இருப்புக்கள் கிரயப் பெறுமதியிலும் 20% குறைவாக விற்கப்பட்டன.
3. கடன்பட்டோர் நிலுவைகள் 20% கழிவுடன் பெறப்பட்டன.
4. முதலீடுகள் ரூபா.79,950/= க்கு விற்கப்பட்டன.
5. அலுவல உபகரணத்தின் ஒரு பகுதியை ரூபா.130,000/= க்கு மதிப்பிட்டு, சாப்பு என்பவர் பெற்றுக் கொண்டார்.
6. வங்கிக் கடனாது, 3மாத அட்டுறு வட்டியுடன் தீர்க்கப்பட்டது.
7. ரூபா.22,000/= கலைப்புச் செலவாக ஏற்பட்டது.
8. கடன் கொடுத்தோர் நிலுவைகள், புத்தகப் பெறுமதியிலும் 10% குறைவாகத் தீர்க்கப்பட்டது.

பங்குடமைக் கலைத்தலுக்கான பின்வரும் கணக்குகளைக் காட்டுக.

- கைத்தேறல் கணக்கு
- பங்காளர் மூலதனக் கணக்கு
- காசுக் கணக்கு

**(20 புள்ளிகள்)**

**Q3)**

கொழும்பு பை நிறுவனமானது, புத்தகப் பைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றது இதன் தலைமை அலுவலகம் கொழும்பில் அமைந்துள்ளது. இது கண்டியிலுள்ள தமது முகவரான கந்துரட்ட பை கம்பனியூடாக தனது விநியோகத்தை மேற்கொள்கின்றது. 31.12.2010 இல் முடிவடையும் மூன்று மாதங்களில், பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

கொழும்பு பை கம்பனி, ஒவ்வொன்றும் ரூபா.500/= கிரயவிலையில் 5000 புத்தகப்பைகளை இறக்குமதி செய்தது. மேலும் கொழும்பு பைக் கம்பனி பின்வரும் செலவுகளை எதிர் கொண்டன.

செலுத்திய தீர்வை ரூபா.40,000/=

காப்புறுதி ரூபா.50,000/=

கப்பற் கட்டணம் ரூபா.25,000/=

ஏனைய நேர்ச் செலவுகள் பையொன்றிக்கு ரூபா.20/=

கொழும்பு பை கம்பனி, கொழும்பிலிருந்து கண்டியிலுள்ள கந்துரட்ட பை கம்பனிக்கு, 5000 பைகளை அனுப்பியபோது, 100 பைகள் வழியில் தொலைந்து விட்டன. இந் நட்டமானது ஒப்படை ஏற்போனால் ஏற்கப்பட்டன. மீதி ஒப்படையில் 4400 பைகள் கந்துரட்ட பை கம்பனியினால் ஏற்கப்பட்டதுடன், மீதி பைகள், திருப்பி அனுப்பிவைக்கப்பட்டன. மேலும் கந்துரட்ட பை கம்பனி பின்வரும் செலவுகளை எதிர்கொண்டன.

போக்குவரத்துச் செலவு -ரூபா.10,000/=

திருப்பி அனுப்புதற் செலவு -ரூபா. 1,200/=

இருப்புவைத்தற் செலவு -ரூபா. 8,800/=

விளம்பரப்படுத்தற் செலவு -ரூபா. 2,500/=

கந்துரட்ட பை கம்பனி ஒரு பாடசாலை கண்காட்சியில் பங்கு பற்றியது. இதற்கு கண்காட்சி கூட வாடகையாக ரூபா.14,500/= செலுத்தினர்.

கந்துரட்ட பைக் கம்பனி ஒவ்வொன்றும் ரூபா.1,100/=படி 1000 பைகளை கடனுக்கும், ஒவ்வொன்றும் ரூபா.1,000/= படி 3000 பைகளை காசுக்கும் விற்பனை செய்தது. இதற்கு மேலதிகமாக 200 பைகளை ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாக வழங்கியிருந்தனர்.

கந்துரட்ட பைக் கம்பனி காசு விற்பனைகளின் மீது 10% விற்பனைத தரகுக்கும், கடன் விற்பனைகளின் மீது 15% விற்பனைத் தரகுக்கும் உரித்துடையது. கந்துரட்ட பைக் கம்பனியிடமிருந்து, கொழும்பு பைக் கம்பனி ரூபா.3,000,000/= பெற்றுக் கொண்டது.

கொழும்பு பைக் கம்பனியின் ஏடுகளில் பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

- கந்துரட்ட பைக் கம்பனியுடனான ஒப்படைக் கணக்கு
- கந்துரட்ட பைக் கம்பனிக் கணக்கு (20 புள்ளிகள்)

Q4)

கொழும்பிலுள்ள விரான் என்பவரும், பதுளையிலுள்ள குமரன் என்பவரும், விழா ஒன்றிக்கு சேலைகளை விற்பனை செய்யும் நோக்குடன் 2010 டிசம்பரில், கூட்டு முயற்சி ஒன்றை நிறுவினர். மேலும் வியாபாரத்தின் இறுதியில், இலாப நட்டங்களை சமமாகப் பகிரவும் இணங்கினர். 31.12.2010 இல் முடிவடைந்த மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.
**விரானால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

01/12 ஒவ்வொன்றும் ரூபா.1500/= விலைப்படி 500 சேலைகளைக் கொள்வனவு செய்தார்.

04/12 விரானுக்கு ஏற்பட்ட விளம்பரப்படுத்தல் செலவு ரூபா.12500/=

05/12 500 சேலைகள் பதுளைக்கு அனுப்பப்பட்டன.

15/12 போக்குவரத்துச் செலவு ரூபா.12500/=

18/12 40 சேலைகளை ரூபா.80000/= விற்கு விற்பனை செய்தார்.

31/12 10 சேலைகளை குடும்ப நண்பர்களின் பாவனைக்கென எடுத்தார்.

**குமரனால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

05/12 குமரன் 450 சேலைகளை மட்டுமே பொறுப்பேற்றார். மீதி சேலைகள் மேலதிக செலவுகள் எதுமின்றி உடனடியாகத் திருப்பப்பட்டன.

07/12 ஒவ்வொன்றும் ரூபா.2000/= படி 200 சேலைகளை விற்பனை செய்தார்.

08/12 ஒவ்வொன்றும் ரூபா.2250/= படி 50 சேலைகளை கடனுக்கு விற்பனை செய்தார்.

09/12 விரானுக்கு ரூபா.400,000/= அனுப்பப்பட்டது.

10/12 ஒவ்வொன்றும் ரூபா.2000/= படி 150 சேலைகள் விற்பனை செய்தார்.

11/12 ஒவ்வொன்றும் ரூபா.2250/= படி 25 சேலைகள், கடனுக்கு விற்கப்பட்டன.

12/12 விரானுக்கு ரூபா.200,000/= அனுப்பப்பட்டது

14/12 கடன்பட்டோரிடமிருந்து ரூபா.150,000/= மட்டுமே திரட்ட முடிந்தது. மீதி அறவிட முடியாக் கடனாகியது.

26/12 மீதிச் சேலைகள் ஒவ்வொன்றும் ரூபா.1800/= படி விற்பனை செய்யப்பட்டன.

31/12 தங்களுடைய நிலுவைகளை காசு மூலம் தீர்த்தனர்.

மேற் குறிப்பிட்ட தகவல்களிலிருந்து, விரான், குமரன் என்பவர்களுக்கிடையேயான, கூட்டு முயற்சிக்கான, பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.

- விரானின் ஏடுகளில், குமரனுடனான கூட்டு முயற்சிக் கணக்கு
- குமரனின் ஏடுகளில், விரானனுடான கூட்டு முயற்சிக் கணக்கு
- 31.12.2010 இல் முடிவுற்ற மாதத்திற்கான கூட்டு முயற்சி விஞ்ஞாபனக் கணக்கு. **(20 புள்ளிகள்)**

Q5) பின்வருவனவற்றில் ஏதாவது ஐந்துற்கு (5) சிறுகுறிப்பு எழுதுக.

I. பங்குச் சந்தை

II. நிதிக் கம்பனிகள்

III. வேலைக் கிரயவிடல் (Job costing)

IV. செயன் முறைக் கிரயவிடல் (Process costing)

V. கிளைக் கணக்கீடு (Branch Accounting)

VI. குத்தகைக் கணக்கீடு (Lease Accounting)

**(20 புள்ளிகள்)**